**லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியத்தின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

நிதியத்தின வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு

பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

**1.5.2 கணக்கீட்டு நியமத்தில் இருந்து விலகல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையின் நிதியறிக்கையிடல் நியமத்தின் 9 இன் 4.11 அத்தியாயத்தின் பிரகாரம்,நிதி சொத்துக்களானது தேய்வடையும் செவவு,முற்றடக்க வருமான கூற்றின் நியாயமான மதிப்பு மற்றும் இலாப நட்ட நியாயமான மதிப்பு என வகைப்படுத்தப்படும்.ஆனால், ரூபா 10,232,401,250 நிதிச் சொத்தானது அவ்வாறு காட்டப்படவில்லை. | ஆதன படி 2019 இல் கணக்குகள் தயாரிக்கப்படும். | கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி கூற்றுக்களின் தேய்மான கொள்ளையின் படி, ஆதனம்,பொறி மற்றும் உபகரணமானது சொத்தின் பயன்படுத்திய திகதியில் இருந்து தேய்மானமிடப்பட வேண்டும்.ஆனால்,2018 இல் வாங்கப்பட்ட ஆதனம்,பொறி மற்றும் உபகரணமானது முழு ஆண்டிற்கும் தேய்விடப்பட்டது.எனவே ரூபா 181,457 கணக்குகளில் மிகையாக காட்டப்பட்டது. | தேய்மானத்தை கணிப்பிடும் போது தவறு ஏற்பட்டது மற்றும் அத் தவறு 2019 கணக்குகளை தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளின் படி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மருத்துவ மற்றும் விபத்து காப்புறுதி செலவு ரூபா 87,500 ஆனால் முற்கொடுப்பனவு ரூபா 360,572 ஆகும் மற்றும் ரூபா 448,072 ஆனது செலவாக நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | முற்கொடுப்பனவு சரியாக கணிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2013 முதல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முழுவதும் சொந்தமான துணை கம்பனிகளான நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி இன் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2013 முதல் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) மாலபேயில் அமைந்துள்ள 2005 இல் ரூபா 12,460,179 ஆக கணக்கிடப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பு இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஐஐரி) வழங்கப்பட்டமை நிறுவனத்தின் ஆதனங்களின் நியமத்தில் பந்தி வேறாக கணக்கிடப்படவில்லை. அதே போல இந்த சொத்துக்கள் தற்போதைய மதிப்பின் அடிப்படையில் நிதிக் கூற்றுகளில் காட்டப்படவில்லை. | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தில் உள்ள பிரச்சனை காரணமாக நிலத்தை மதிப்பிட முடியவில்லை. | எஸ்எல்ஐஐரி உடன் குத்தகை ஒப்பந்தம் உள்ளது.எனவே மதிப்பீடு மற்றும் தற்போதைய பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 11(1) (ஆ) இன் பிரகாரம், மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அபிவிருத்தி லொத்தர் சபையை உருவாக்குவதற்கு முதலிடப்பட்ட விகிதத்தினை விட அதிகபடியான தொகையை அனுப்பும்.இருப்பினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நம்பிக்கை நிதியத்தின் பங்கு ரூபா 1,093,798,978 ஆக இருந்தது,இது ரூபா 189,198,591 ஆக குறைவடைந்துள்ளது.904,600,387 மட்டுமே நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி லொத்தர் சபையையால் பெறப்பட்ட தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.செலுத்த வேண்டிய இலாபத்தின் அளவு குறித்து உடன்படிக்கை இல்லை. | ஒரு நிச்சயமான உடன்படிக்கையை அடைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2012 முதல் 31 டிசம்பர் 2018 வரை அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து மிகையை பெற்றிருக்க வேண்டும்,ஆனால் ஜனாதிபதி நிதியத்தில் வழங்கப்பட்ட ரூபா 835,766,892 கணக்கில் காட்டப்படவில்லை. | அபிவிருத்தி லொத்தர் சபையையால் பெறப்பட்ட தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் கணக்கிடப்பட்டுள்ளது.செலுத்த வேண்டிய இலாபத்தின் அளவு குறித்து உடன்படிக்கை இல்லை. | நிச்சயமான உடன்படிக்கைக்கு நிதிக் கூற்றில் தேவையான சீராக்கங்களை மேற் கொள்ள வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டியவைகள்**

-------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 முதல் பல பாடசாலைகளில் நிர்மாணங்கள் சார்பாக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 3,832,875 செலுத்தப்பட வேண்டிய தொகையானது நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்படுகின்றது மற்றும் அதற்காக யாரும் விண்ணபிக்கவில்லை மற்றும் அது செலுத்த வேண்டியதாக அடையாளம் காணப்படவில்லலை. | கோரிக்கை யாராலும் விடுக்கப்படவில்லை மற்றும் எதிர்காலத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | சுரியாக அடையாளம் காண்பதன் மூலம் செலுத்த வேண்டிய நிலுவைகளை சரி செய்ய வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

-------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 6.5.1 ஆம் பந்தி | வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.ஆனால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 31 யூலை 2019 இல் கணக்காய்வாளர் கலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த தாமதங்கள் ஏற்படாது. | சுற்றறிக்கையின் படி செயற் பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 451,560,612 தொகையான மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 227,539,892 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 679,100,504 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னேற்றத்திற்கான பிரதான காரணம் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 904,600,387 ஆகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டன.

(அ)முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் பிரதான வருமான வழிகள் 67 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெறப்பட்ட வருமானம் 100 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாகும்.

(ஆ)ஏனைய வருமான மூலகங்கள் பெறப்பட்ட வருமானம் 29 சதவீதத்தால் அதிகரித்தமையும் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)கல்வியில் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள்,நிறுவகங்கள்,அடிதளங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களில் முகாமைத்துவம் மற்றும் நடத்தைகளை அமைத்தல் மற்றும் உதவுதல் மற்றும் இளைஞர்களிற்கு அவர்களின் தொழில் தகைமை மற்றும் திறனை வளர்த்து கொள்வதற்காக தொழில் பயிற்சி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் நிர்வகிப்பதில் உதவுதல்,கல்வியின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள்,ஆசிரியர்கள் மற்றும் நபர்களின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்காக உதவிகளை வழங்குதல்,அந்த நோக்கங்கள் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 6.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.ஆனால் செயலில் கவனம் செலுத்தப்படவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்ற நிதியத்தில் போதுமான பணம் இல்லை. | சட்ட்த்தின் அடிப்படையில் நிதி திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பாணையில் வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில் நுட்ப(இணை) நிறுவனத்தால் (எஸ்எல்ஐஐரி) 14 நவம்பர் 2005 மற்றும் 12 மே 2017 இல் கையெழுத்திடப்பட்ட எஸ்எல்ஐஐரி இன் குறிப்பாணையின் பிரகாரம் எஸ்எல்ஐஐரி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான அதன் உரிமையை இழந்து விட்டது.மேலும்,லஞ்சம் மற்றும் ஊழல் ஆணையம் மற்றும் ஜனாதிபதி விசேட புலனாய்வு ஆணையத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 2 விசாரணைகளும் 2015 ற்கான ஒப்பந்தம் சட்டபூர்வமானவை அல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றன.மற்றும் ஜீலை 12,2019 அன்று நடைபெற்ற பொது நிறுவன கணக்கீட்டு குழு கூட்டத்தில் எஸ்எல்ஐஐரி யுடன் எவ்வாறு கையாள்வது குறித்து ஒரு மாதத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.உயர்கல்வி அமைச்சின் செயலாளரிற்கு மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைவரிற்கு அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டதாக நாங்கள் அறிவித்துள்ளோம்.இது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது,ஆனால் இது அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அனுமதி பெறப்படவில்லை. | பரிந்துரைக்ள அனுமதிக்கப்பட்ட பின்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 05 செப்ரெம்பா 2018 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இல . எம்ஜஎன்/18/1873/824/020 இன் பிரகாரம்,முதலீட்டு முகாமைத்துவத்திற்கான உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டது மற்றும் 28 பெப்ரவரி 2019 இல் நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியால் முகாமைத்துவம் செய்யப்பட்ட முதலீட்டு போர்ட்போலியோவானது இலங்கை வங்கி கிளையில் உருவாக்கப்பட்ட மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டது.அமைச்சரவை முடிவின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் கோப்பரேசன் கம்பனி கலைக்கப்பட வேண்டும் மற்றும் | நிறுவனத்தின் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அமைச்சரவை முடிவை விரைவாக செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி விற்பனை செய்யப்பட வேண்டும்.எனினும், இவ்வாறு செய்யப்படவில்லை. | | |
| (ஈ) மேலே (இ) இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் செய்யப்படவில்லை,இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட 4 பில்லியனில் இருந்து 1.111 பில்லியன் கடன் பெற்றது மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் கம்பனியின் திறைசேரி உண்டியல் மற்றும் திறை சேரி முறிகளட 26 மார்ச் 2019 இல் கொள்வனவு செய்யப்பட்டது மற்றும் 1.113 பில்லியனுக்கு 27 மார்ச் 2019 இல் விற்கப்பட்டது மற்றும் அந்த பணம் 27 ஜீன் 2019 நிலையான வைப்பில் முதலிடப்பட்டது. | நிறுவனத்தின் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அமைச்சரவை முடிவை விரைவாக செயற்படுத்த வேண்டும். |
| (உ)நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் 6.2 (அ),(இ) மற்றும் (ஈ) இன் பிரகாரம், நம்பிக்கை பொறுப்பு நிதியம் அரசாங்கத்தின் அனுமதியுடன் பணத்தை திரட்டி கொள்வதற்கு உள் நாட்டு அல்லது வெளி நாட்டு மூலகங்களிலிருந்து அல்லது மூலப் பொருளிலிருந்து லொட்டரிகளை நடாத்துவதற்கு மற்றும் கொடை,பரிசு,அல்லது நன்கொடை ஏற்று கொள்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்ட போதிலும்,குறிப்பிட்ட வழியிலிருந்து நிதி வளங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.அரசாங்கத்திடமி ருந்து 49 சதவீதம் நன்கொடையளிக்கப்ட்ட பின்பு முழுமையாக மஹாபொல நிதியத்திலிருந்து பல்கலைக்கழக மாணவர்களிற்காக மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. | நிறுவனத்தின் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் எதிர் காலத்தில் செயல்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதியை திரட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 பெறுகைகள்
----------------

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஆரசாங்க பெறுகைகள் வழிகாட்டலின் 2006 இன் வழிகாட்டலின 4.2 இன் பிரகாரம்,குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்ப்படும் பெறுகைகள் நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டும்.எனினும்,நிதியம் பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்கவில்லை. | இது எதிர்காலத்தில் செய்யப்படும். | பெறுகைகள் வழிகாட்டலிற்கு ஏற்ப செயற்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 டிசம்பர் 31 வரை நிதியம் 26 ஊழியர்களுடன் அதிகாரமளிக்கப்பட்டு காணப்பட்டது.எனவே உண்மையில் நிதியத்தில் 14 உறுப்பினர்களை கொண்டிருந்தது.12 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது.06 உயர் மட்ட பதவிகள் 03 இடைமட்ட பதவிகள் மற்றும் 03 ஆரம்ப நிலை பதவிகள் காணப்படுகின்றன. | ஆட்சேர்ப்பு நடைபெற்று கொண்டிருக்கின்றது. | பொருத்தமான பதவிகளை அடையாளம் கண்டு அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |